OS.No. 99/2024

Date : 21.01.2026

Witness Name & Rank – ஜோதிமணி – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. வழக்கு சொத்துக்கள் எனதுஅப்பாவிற்கு பூர்வீக வழியில் வந்த சொத்து என்றால் சரிதான். மேற்படி சின்னையக்கவுண்டருக்கு எனது அம்மா தெய்வாத்தாள் மற்றும் 1ம் பிரதிவாதி அம்மாசையப்பன், 2ம் பிரதிவாதி சரஸ்வதியின் கணவர் பழனிசாமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தந்தை 2002ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் ஞாபகம் இல்லை, ஆனால் 20 ஆண்டுகள் இருக்கும். எனது அம்மாவிற்கு 1970 காலத்திற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனதுஅம்மாவை அன்னூருக்கு அருகில் உள்ள காடுவெட்டி பாயைத்தில் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். எனது அம்மாவின் திருமணத்திற்கு 30 சவரன் தங்க நகை சீர் வரிசை செய்தனர் என்றால் இல்லை. எனது தந்தைக்கு காடுவெட்டிபாளையத்தில் காலை எண். 20ல் 0.53 ஏக்கர் பூமி இருந்தது என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் வழக்கிற்காக மேற்படி சொத்தை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
2. எனது தாத்தா சின்னையகவுண்டர் மேற்படி காலை எண். 20 0.53 ஏக்கர் பூமியை எனது தந்தைக்கு அவரது செலவில் கிரைய செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அதற்கு எனது தந்தையிடம் தாத்தா கிரையத்தொகை எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சின்னியக்கவுண்டர் மற்றும் அவரது ஆண் வாரிசுகளான 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் கணவர் ஆகியோர் 27.12.1993ம் தேதியே எழுது பூர்வமான பதிவு செய்யப்பட்ட பாகம் செய்து கொண்டார்கள் என்றால் பாகம் செய்து கொண்டு எனது அம்மாவிற்கும் சேர்த்து எனது தாத்தா சின்னியக்கவுண்டர் தன் கை வசம் சொத்து வைத்திருந்தார்.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.